STC.No. 266-2026
நாள் 12.06.2026.
P.W.2 - (அபிமன்னன் கருப்பசாமி )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

எனக்கும் புகார்தாரருக்கும் நல்ல உறவு முறை பழக்கம் உள்ளது என்றால் சரி. எனக்கு புகார்தாரரின் சகோதரர் தினேஷ் குமாருடன் நல்ல பழக்கம் உள்ளது என்றால் சரி. நானும் புகார்தாரரின் தகப்பனார் திருப்பதியும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் பார்க்கிறோம் என்றால் சரி. திருப்பதி அரசு வேலை பார்க்கிறார் என்றால் சரி. அதனால் அவர் நிலங்கள் வாங்குவது அவர் மனைவி பெயர் மற்றும் என் பெயரில் என்றால் சரி. திருப்பதி மற்றும் மாரியம்மாள் இந்த வழக்கு எதிரியுடன் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்தார் என்றால் சரி. ஆஜர் எதிரியின் ரியல் எஸ்டேட் ஆவணங்கள் திருப்பதி மற்றும் மாரியம்மாளிடம் இருக்கிறது என்றால் அது வேறு பரிவர்த்தனைக்குரிய ஆவணங்களாகும். ஆஜர் எதிரி திருப்பதி மற்றும் மாரியம்மாள் ஆகியயோருக்கு எதிராக திருத்தங்கல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் ஆம். அந்த காவல்நிலைய விசாரணைக்கு நானும் சென்றிருந்தேன் என்றால் சரி. 2021 ஆண்டு நடைபெற்ற ரியல் எஸ்டேட் பரிவர்த்தனை தொடர்பாக நில மோசடி பிரிவில் ஆஜர் எதிரி திருப்பதி மாரியம்மாள் ஆகியோருக்கு எதிராக ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் ஆம். அது பேசி முடிக்கப்படவில்லை, நிலுவையில்தான் உள்ளது.

அதன்பின்பு, ஆஜர் எதிரியும் திருப்பதி, மாரியம்மாள் ஆகியோருக்கு இடையே ரியல் எஸ்டேட் தொழில் நடைபெறவில்லை என்றால் தொழில் நடைபெறவில்லை, பேச்சு வார்த்தை நடைபெற்றது. அவ்வாறு இடம் வாங்குவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதால் இரு தரப்பினருக்கு இடையே நல்ல உறவு முறை இல்லை என்றால் ஆம், எதிரி பணத்தை வாங்கிக் கொண்டு ஆவணம் எழுதிக் கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்தார். 2021 ஆண்டிலிருந்து பிரச்சனை நடைபெற்று கொண்டிருக்கிறது என்றால் ஆம், பணம் கொடுக்கல் வாங்கலும் நடைபெற்றுக் கொண்டீருந்தது. பணம் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றதாக சொல்வது 2021ம் ஆண்டிற்கு பின்பு. அவ்வாறு பிரச்சனை ஏற்பட்ட பின் எவ்வாறு அவருக்கு பணம் கொடுத்திருக்க இயலும் என்றால் அவர் பணம் கொடுங்கள் என்றும் பத்திரம் எழுதி தருவதாக சொல்லி பணம் வாங்கினார். என்னிடமும் அவ்வாறு பணம் வாங்கி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். என் பெயரில் எழுதிய சொத்தை நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் எதிரி மூலமாகத்தான் சமீபத்தில் விற்பனை செய்தேன். என்னிடம் வாங்கிய பணத்திற்கு எதிரி ஆவணம் எழுதிக் கொடுத்ததுபோல் புகார்தாரரிடம் பணம் பெற்றிருந்தால் அவரிடமும் ஆவணம் எழுதி கொடுத்திருப்பார் என்றாலும் புகார்தாரரிடம் எதிரி பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. திருப்பதி வாத்தியார் எதிரியுடன் தொழில் செய்தது திருப்பதி வாத்தியார் மகன்களுக்கு பிடிக்கவில்லை என்றால் சமீபத்தில் ஒரு ஆண்டு காலமாக பிடிக்கவில்லை.

அவ்வாறு சொல்லியது இந்த வழக்கு கடன் ரூ.5 லட்சம் கொடுத்ததாக சொல்வதற்கு முன்பு ஆகும். நான் புகார்தாரருக்கு ரூ.5 லட்சம் கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான்

புகார்தாரருக்கு ரூ.5 லட்சம் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். புகார்தாரருக்கு நான் ரூ.5 லட்சம் கொடுத்ததாக சொல்வதற்கு புகார்தாரர் எனக்கு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் எங்கள் உறவு முறையில் நாங்கள் ஆவணம் எழுதி வாங்குவது இல்லை. நான் தினேஷ் குமார் தாக்கல் செய்த வழக்கிலும் சாட்சியம் அளித்தேன் என்றால் சரி. அந்த வழக்கிலும் நான் தினேஷ் குமாருக்கு ரூ.20 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. புகார்தாரர் என் நெருங்கிய உறவினர் என்பதால் நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலைக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் புகார்தாரரின் தாயார் மாரியம்மாள் எதிரியுடன் தொழில் செய்தபோது வாங்கி வைத்திருந்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

RL 12/6/21

நீதித்துறை விரைவு நடுவர்.
திருவில்லிபுத்தூர்.